**தினகரன் (24.09.2024)**

## டிஎன்பிஎல் சமூக பொறுப்புணர்வு திட்டத்தில்

# கரூரில் இலவச பொது மருத்துவ முகாம்



கரூர் காகிதபுரத்தில் நடந்த இலவச பொது மருத்துவ முகாமினை காகித நிறுவனத்தின் முதன்மை பொது மேலாளர் நாகராஜன், பொதுமேலாளர் கலைச்செல்வன் மற்றும் கோயமுத்தூர், ராயம் கேர் சூப்பர் பெஷாலிட்டி மருத்துவமனையை டாக்டர்.அருள் செல்வன், (மூளை மற்றும் நாம்பிமன் நிபுணர் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

## ● பங்கேற்ற 656 பேருக்கு சிகிச்சை

வேலாயுதம்பாளையம், செப். 24: கரூர் அருகேயுள்ள காகிதபுரம் தமிழ்நாடு காகித ஆலை சார்பில் இலவச மருத்துவ நடைபெற்றது.

கரூர் அடுத்த காகிதபுரத்தில் உள்ள தமிழ்நாடு காகித ஆலை(டிஎன்பிஎல்) சார்பில் ஆலையை சுற்றியுள்ள மக்களுக்கு சமூக பொறுப்புணர்வு திட்டத்தில் (சிஎஸ்ஆர்) இலவச மருத்துவ முகாம், குடிநீர், சாலை வசதி, இலவச தொழிற்கல்வி ஆகியவை அளிக்கப்பட்டு வருகின்றன. அதில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மற்றும் கோயமுத்தூர், ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை ஆகியன சார்பில் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளில் உள்ள கிராம மக்களின் நலனுக்காக இலவச சிறப்பு பொது மருத்துவ முகாம் டிஎன்பிஎல் மெட்ரிக்மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

இம்முகாமினை, காகித நிறுவனத்தின் முதன்மை பொது மேலாளர் (இயக்கம்) நாகராஜன், பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் மற்றும் கோயமுத்தூர், ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை டாக்டர் அருள் செல்வன், (மூளை மற்றும் நரம்பியல் நிபுணர் ஆகியோர் துவக்கி வைத்தனர். இம்முகாமில், ராயல் கேர் மருத்துவமனையைச் சார்ந்த 16 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் மருத்துவக் குழுவினர்கள் கலந்து கொண்டு இலவச மருத்துவ பரிசோதனை செய்தனர்.

இதில், இருதயம், நரம்பு, கல்லீரல், சிறுநீரகம், சர்க்கரை நோய், காய் நரம்பு கருன், எலும்பு, நுரையீரல், முடக்குவாதம், மகப்பேறு, கர்ப்பபை, பொது மருத்துவம் மற்றும் தோல் நோய் போன்ற அனைத்துவித நோய்களுக்கும் பொது மருத்துவ சிகிச்சை மற்றும் சிறப்பு மருத்துவ பரிசோதனை செய்து, மருத்துவ ஆலோசனைகள் மற்றும் மருந்துகள் வழங்கப்பட்டன. இம்முகாமில், கலந்து கொண்டவர்களுக்கு மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டது. மேலும், மருத்துவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட நபர்களுக்கு இரத்த அழுத்தம் பரிசோதனை, ஈ.சி.ஜி. பரிசோதனை, பி.எம்.டி.. (BMD), பி.எப்படி (PFT) மற்றும் ஃபைப்ரோ ஸ்கேன் (FIBRO SCAN) பரிசோதனையும் செய்யப்பட்டது.

> ● மருத்துவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட நபர்களுக்கு இரத்த அழுத்தம் பரிசோதனை, ஈ.சி. ஜி. பரிசோதனை, பி.எம். டி. (BMD), பி.எப்படி (PFT) மற்றும் ஃபைப்ரோ ஸ்கேன் (FIBRO SCAN) பரிசோதனையும் செய்யப் பட்டது.

டாக்டர்கள் அருன் செல்வன், (மூளை மற்றும் நரம்பியல் நிபுணர்), கிருஷ்ண கிஷோர், (இருதயம் மற்றும் இரத்தநாள அறுவை சிகிச்சை நிபுணர்), சந்திரமோகன், (இருதய நோய் சிகிச்சை நிபுணர்), சௌண்டப்பன், (கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை நிபுணர்), கோபி கிருஷ்ணன், (சிறுநீரக மருந்தியல் நிபுணர்), மாதேஸ்வரன் மணி, (முடக்குவாத நோய் மருத்துவர்), வினோதா அருணாச்சலம், (மகப்பேறு மற்றும் பெண்கள் நலம்-லேப்ரோஸ்கோபி அறுவை சிகிச்சை நிபுணர்), பய்யபாய்த்வா, (நுரையீரல் மருத்துவர்), செல்லப்பா, (இரத்தநாள அறுவை சிகிச்சை நிபுணர்). தேவி காயத்ரி, (பொது மற்றும் சர்க்கரை நோய் மருத்துவர்), சபரீஸ், ஐஸ்வர்யா, கவிதா, விஷ்வ பிரியா, சுவாதி, (பொது நல மருத்துவர்கள்) மற்றும் ஐஸ்வர்யா, (தோல் நோய் மருத்துவர்). கரூர் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்த முகாமில், கரூர் மற்றும் காகித ஆலையைச் சுற்றியுள்ள பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளிலிருந்து வந்த 656 பேர் கலந்து தொண்டு சிகிச்சை பெற்றனர். முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு உணவு மற்றும் மற்றும் பேருந்து வசதி இலவசமாக செய்து தரப்பட்டன.

மருத்துவ முகாமினை காகித நிறுவனத்தின் மனித வளத்துறை பொது மேலானர் (மனிதவளம்) கே. கலைச்செல்வன் தலைமையிலானோர் செய்திருந்தனர்.

## தினமணி (24.09.2024)

# டிஎன்பிஎல் ஆலை சார்பில் இலவச பொது மருத்துவ முகாம்



இலவச மருத்துவ முகாமில் நோயாளியை பரிசோதித்த மருத்துவர். உடன் டிஎன்பிஎல் ஆலையின் முதன்மை பொது மேலாளர் (இயக்கம்) எஸ். நாகராஜன், பொது மேலாளர் (மனிதவளம்) கே. கலைச்செல்வன், கோவை ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை மருத்துவர் ஏ. அருள் செல்வன் உள்ளிட்டோர்.

**கரூர், செப். 23:** கரூர் மாவட்டம், புகழூர் டிஎன்பிஎல் ஆலை மற்றும் கோவை ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி சார்பில் ஞாயிற்றுக்கிழமை இலவச சிறப்பு பொது மருத்துவ முகாம் நடைபெற்றது.

டிஎன்பிஎல் மெட்ரிக் பள்ளியில் நடைபெற்ற முகாமை ஆலையின் முதன்மை பொது மேலாளர் (இயக்கம்) எஸ். நாகராஜன், பொது மேலாளர் (மனிதவளம்) கே. கலைச்செல்வன் மற்றும் கோவை ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை மருத்துவர் ஏ. அருள் செல்வன், (மூளை மற்றும் நரம்பியல் நிபுணர்) ஆகியோர் தொடங்கிவைத்தனர்.

முகாமில், பொதுமக்களுக்கு இருதயம், கல்லீரல், சிறுநீரகம், சர்க்கரை நோய் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு சிறப்பு மருத்துவப் பரிசோதனை செய்து மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு, மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன. மேலும், மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்டநபர்களுக்கு ரத்த அழுத்த பரிசோதனை, ஈ.சி.ஜி. பரிசோதனை செய்யப்பட்டது. முகாமில் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளில் உள்ள கிராமங்களில் இருந்து வந்திருந்த சுமார் 656 பேர் பங்கேற்றனர்.

## தினத்தந்தி (24.09.2024)



# புகழூர் காகித ஆலை சார்பில் பொது மருத்துவ முகாம்

நொய்யல், செப்.24-

புகழூர் காகித ஆலை, கோவை ராயல் கேர் மருத்துவமனை சார்பில் காகித ஆலை மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பொது மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமை காகித ஆலையின் முதன்மை பொது மேலாளர் (இயக்கம்) நாகராஜன், பொதுமேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், கோவை ராயல் கேர் மருத்துவமனையின் மூளை மற்றும் நரம்பியல் நிபுணர் டாக்டர் அருள் செல்வன் தொடங்கி வைத்தனர். ராயல்கேர் மருத்துவமனையை சேர்ந்த 16 சிறப்பு டாக்டர்கள் மற்றும் மருத்துவக் குழுவினர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு இருதயம், நரம்பு, கல்லீரல், சிறுநீரகம், தோல் நோய் உள்பட அனைத்துவிதமான நோய் அறிகுறிகளுக்கும் மருத்துவப் பரிசோதனை செய்தனர். பின்னர் பொது மருத்துவமும் நடந்தது.

பின்னர் டாக்டர்களின் பரிந்துரைப்படி பொதுமக்களுக்கு இலவசமாக மருந்து, மாத்திரைகள் வழங்கப்பட்டது. முகாமில் புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, என்.புகழூர், திருக்காடுதுறை, கோம்புப் பாளையம், வேட்டமங்கலம், புன்னம் ஆகிய ஊராட்சிகளை சேர்ந்த 800-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இதற்கான ஏற்பாடுகளை காகித ஆலையின் மனிதவளத்துறை அலுவலர்கள் செய்திருந்தனர்.

**தினமலர் (25.09.2024)**



டிஎன்பிஎல் பள்ளியில் நடந்த இலவச பொது மருத்துவ முகாமை காகித நிறுவன முதன்மை பொது மேலாளர் நாகராஜன், பொது மேலாளர் கலைச்செல்வன், கோவை ராயல் கேர் மருத்துவமனை டாக்டர் அருள்ச்செல்வன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

# இலவச பொது மருத்துவ முகாம்

**வேலாயுதம்பாளையம்:** தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், கோவை ராயல் கேர் மருத்துவமனை ஆகியவற்றின் சார்பில் இலவச சிறப்பு பொது மருத்துவ முகாம் டிஎன்பிஎல் மெட்ரிக் மேல் நிலைப்பள்ளியில் நடந்தது.

காகித நிறுவன முதன்மை பொது மேலாளர் நாகராஜன், பொது மேலாளர் கலைச்செல்வன், கோவை ராயல் கேர் மருத்துவமனை மூளை, நரம்பியல் நிபுணர் டாக்டர் அருள்செல்வன் ஆகியோர் முகாமை தொடங்கி வைத்தனர்.

ராயல் கேர் மருத்துவமனை சார்ந்த 16 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் மருத்துவக் குழுவினர் இதயம், நரம்பு, கல்லீரல், சிறுநீரகம், சர்க்கரை நோய், பொது மருத்துவம் மற்றும் தோல் நோய் உட்பட அனைத்து விதமான நோய் அறிகுறிகளுக்கும் மருத்துவ பரிசோதனை செய்து ஆலோசனை வழங்கினர். பொது மக்களுக்கு மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன. காகித நிறுவனம் சார்பில் முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு காலை சிற்றுண்டி, மதிய உணவு, தேநீர் மற்றும் பஸ் வசதி இலவசமாக செய்து தரப்பட்டது.

இந்து தமிழ் திசை (26.09.2024)



புகழூர் டிஎன்பிஎல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற இலவச பொது மருத்துவ முகாமை டிஎன்பிஎல் தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவன முதன்மை பொது மேலாளர் (இயக்கம்) எஸ்.நாகராஜன், பொது மேலாளர்(மனிதவளம்) கே.கலைச்செல்வன், கோயம்புத்தூர் ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை மருத்துவர் வி.அருள்செல்வன் ஆகியோர் தொடங்கிவைத்தனர்.

# டிஎன்பிஎல் மருத்துவ முகாமில் 656 பேருக்கு சிகிச்சை

கரூர்

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்(டிஎன்பிஎல்) மற்றும் கோயம்புத்தூர் ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை ஆகியவை இணைந்து இலவச சிறப்பு மருத்துவ முகாமை டிஎன்பிஎல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் அண்மையில் நடத்தின.

முதன்மை பொது மேலாளர் (இயக்கம்) எஸ்.நாகராஜன், பொது மேலாளர் (மனிதவளம்) கே.கலைச்செல்வன், கோயம்புத்தூர் ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை மருத்துவர் வி.அருள்செல்வன் ஆகியோர் முகாமை தொடங்கிவைத்தனர்.

ராயல் கேர் மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர்கள் ஏ.அருள்செல்வன், கிருஷ்ண கிஷோர், க.சந்திரமோகன், சவுண்டப்பன் உட்பட பல்வேறு துறை நிபுணர்கள் அடங்கிய மருத்துவக் குழுவினர், பொதுமக்களுக்கு பரிசோதனை செய்து, சிகிச்சை அளித்தனர்.

இதயம், நரம்பு, கல்லீரல், சிறுநீரகம், சர்க்கரை நோய், கால் நரம்புச் சுருள், எலும்பு, நுரையீரல், முடக்குவாதம், மகப்பேறு, கர்ப்பப்பை, பொது மருத்துவம், தோல் நோய் போன்ற அனைத்து வித நோய் அறிகுறிகளுக்கும் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு, மருந்து, மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

மேலும், மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்ட நபர்களுக்கு ரத்த அழுத்த பரிசோதனை, இசிஜி, பிஎம்டி, பிஎப்டி, பைப்ரோ ஸ்கேன் பரிசோதனை செய்யப்பட்டன. காகித ஆலையைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த 656 பேர் முகாமில் பங்கேற்றனர்.